கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.24/2021** தேதி: **18.02.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (முருகன், த/பெ.அருணகிரி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(1) என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது நான் வாதியின் மகன் வேல்முருகனுக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 47/2021 பிராதின் நகல் என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அந்த வழக்கானது promissory Note அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதியின் மகன் வேல்முருகன் 29.01.2018 ல் ரூ.5 லட்சம் கடண் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

(2) அதுபோலவே கூடுதல் சார்பு நீதிமன்றம் எண் 2 ல் அசல் வழக்கு எண் 48/2021 ஐ வாதியின் மகன் வேல்முருகனுக்கு எதிராக 31.01.2018 ல் ரூ.5 லட்சம் கடண் பெற்றதாக கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அவ்வழக்கில் உள்ள பிராது என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** வாதியின் கணவர் பன்னீர் செல்வமும் என்னிடம் 29.01.2018 ல் ரூ. 4 லட்சம் கடண் பெற்றதாக முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 49/2021 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அவ்வழக்கில் உள்ள பிராது என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அது போல வாதியின் மகன் வேல்முருகன் மீது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:12:55 +0530

கிரைய உடன்படிக்கையின் கீழ் ரூ. 49 லட்சத்துக்கு அசல் வழக்கு எண் 55/2021 கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அவ்வழக்கில் உள்ள பிராது என்றால் சரிதான். இது வா.த.சா.ஆ. **7** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

(3) 31.03.2021 ல் நான் வாதியிடம் இருந்து பெற்ற கையொப்பங்களை தவறுதலாக பயன்படுத்தியதாக கூறி வாதியின் மகன் வேல்முருகன் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த அறிவிப்பு நகல் என்றால் சரிதான். இது வா.த.சா.ஆ. **8** ஆக குறியிடு செய்யப்படுகிறது. 18.01.2021 ல் வாதியின் மகன் வேல்முருகன் எனக்கு எதிராக காவல் துறையில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த புகார் என்றால் சரிதான். இது வா.த.சா.ஆ. **9** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

(4) இந்த புகாருக்கு பின்னிட்டு தான் நான் அனைத்து வழக்குகளையும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வாதியின் மகன் வேல்முருகனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் முன் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் செய்திதாள் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பை பார்த்து நேரடியாக வழக்கு தாக்கல் செய்தேன்.

(5) செய்தி தாள் அறிவிப்பு எதற்காக கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. வா.த.சா.ஆ. 2 தான் அந்த செய்தி தாள் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த பொது அறிவிப்பில் சொல்லப்பட்ட சங்கதிகயானது நான் வழக்கு சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்த கூடாது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னை பற்றிய அவதூரான சங்கதிகள் தான்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.18 18:13:00
+0530

அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(6) அந்த அறிவிப்பிற்கு நான் மறுப்பு அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றாலும் நடவடிக்கை எடுத்தேனா என்றாலும இல்லை. வழக்கு சொத்தினை பொறுத்து கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 127/2021 ஐ தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அவ்வழக்கின் பிராது என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 10 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

(7) அதில் வாதியின் கணவர் 26.02.2020 ல் பொது அதிகார பத்திரம் வழங்கியதாகவும் 12.03.2020 அன்று ரூ.30 லட்சம் பெற்றுக்கொண்டதாகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதே சொத்தை பொறுத்து 08.12.2017 ல் விற்கிரைய உடன்படிக்கை செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த கிரைய உடனப்டிக்கை பத்திரம் என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 11 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

(8) இந்த கிரைய உடன்படிக்கை பத்திரம் ரத்து செய்யப்பட்டதா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.11 ரத்து செய்யப்படாதிருக்க 12.03.2020 பெறப்பட்டதாக சொல்லப்படும் ரசீதானது அசல் வழக்கு எண் 128/2021 க்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அவ்வழக்கின் பிராது என்றால் சரிதான். **இது வா.த.சா.ஆ. 12 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** 18.01.2021 ல் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்ட புகார் குற்ற பிரிவிற்கு மாற்றப்பட்டது என்றால் இல்லை.

(9) அது போல் வாதியின் கணவர் பன்னீர் செல்வத்திடம் 08.06.2018 ல் விற்கிரைய

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:13:06 +0530

ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த விற்கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **13** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u>

(10) இந்த ஆவணங்களை அடிப்படையாகக்கொண்டு அசல் வழக்கு எண் 127/2021 தாக்கல செய்யப்பட்டது என்றால் சரிதான். இதே காலக்கட்டத்தில் 29.01.2018 ல் வாதியின் மகனோடு ஒரு விற்கிரைய பத்திரம் ஏறப்படுத்தபட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த ஆவணம் தான் அந்த விற்கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **14** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u>

(11) அந்த விற்கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு போடப்பட்டது என்றால் ரூ.15 லட்சத்திற்கு போடப்பட்டது. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் நான் ரூ.14 லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். இந்த விற்கிரைய உடனபடிக்கையை நானும் வாதியின் மகனும் 28.02.2020 ரத்து செய்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த ரத்து பத்திரம் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **15** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u>

(12) இந்த ரத்து பத்திரம் ஏறப்டுத்தப்பட்ட நாளில் எனது மணைவி 2 ஆம் பிரதிவாதி பெயருக்கு அதே சொத்தை பொறுத்து கிரையம் ஏறப்டுத்தப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **16** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u> வா.த.ச.ஆ 14 ன் படி சொத்து மதிப்பு ரூ.15 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்க வா.த.சா.ஆ 16 ன் கீழ் சொத்தானது எவ்வளவு

ரூபாய்க்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.6,45,000/-க்கு(ஆறு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம்) கிரையம் பெறப்பட்டது. இது அரசாங்க மதிப்பின் படியான தொகை ஆகும்.

(13) நான் பல பத்திரங்கள் கையாண்டிருக்க பத்திரங்கள் பற்றிய அடிப்படை நிபந்தனைகள் எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். சொத்து கைமாறப்படும் மதிப்பு தான் அந்த பத்திரத்தின் மதிப்பே தவிர அரசாங்கத்தின் மதிப்பு அந்த பத்திரத்தில் குறிப்பிடப்படமாட்டாது என்றால் சரியல்ல. வா.த.ச. ஆ.14 ன் படி ரூ. 14 லட்சம் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல.

(14) வாதியின் மகன் வேல்முருனிடம் அவருக்கு சொந்தமான சொத்திற்கு ரூ.49 லட்சத்திற்கு கிரைய உடன்படிக்கை ஏறப்டுத்தினேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த கிரைய உடன்படிக்கை என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **17** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u> அதே போல் அவருக்கு பாத்தியப்பட்ட புதுவை மாநிலத்தில் உள்ள சொத்தை எனது மகள் பெயருக்கு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது அந்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ. **18** ஆக குறியிடு செய்யப்படுகிறது.</u>

(15) இதை தவிர வாதி மற்றும் வாதி குடும்பத்திற்கு வேறு எந்த சொத்துக்களும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் வாதியிடம் இருந்து நிரப்படாத தாள்களில் பெறப்பட்ட கையொப்பங்களைக் கொண்டு தான் பல ஆவணங்களை தயார் செய்தேன் என்றாலும் ஆகவே தான் வா.த.சா.ஆ. 2-ன் கீழ் பொது விளம்பரம் அளித்தார் என்றாலும் சரியல்ல.

(16) எனக்கு அரசியல் பின்புலம் இருப்பதால் வழக்கு சொத்துக்களை

குறித்து எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளோடு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வேல்முருகனுக்கு சொந்தமான திருமலை நகரில் உள்ள சொத்துக்களுக்கு பொது அதிகாரம் எனக்கு அளித்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி மறுபடியும் இல்லை என்று மறுத்து கூறுகிறார். அதன் அடிப்படையில் நான் எனது மணைவிக்கு அச்சொத்துக்களை கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(17) நான் எனது மணைவி பெயருக்கு திருமலை நகரில் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் அவர் தனியாக கிரையம் பெற்றுள்ளார். நானும் எனது மணைவியும் ஒரே வீட்டில் தான் வசிக்கிறோம் என்றால் சரிதான். எனது மணைவி இவ்வழக்கில் சாட்சி சொல்ல வருவாரா என்றால் வரமாட்டார்கள். நான் மேலே சொல்லப்பட்ட பண பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன்.

(18) அதன் விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்சொன்ன சொத்துக்களை நான் கணக்கு காட்டவில்லை . கிரையம் பெற்ற சொத்துக்களை மட்டுமே காண்பித்துள்ளேன். கிரைய உடன்படிக்கையில் உள்ள சொத்துக்களை காண்பிக்க அவசியம் இல்லை. நான் பல ஆவணங்களை தயார் செய்து வாதிகளை பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளதால் தான் வாதி எனக்கு எதிராக தடை உத்தரவு கோரியுள்ளார் என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி

1. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் ஓய்வு பெற்ற பொறியாளர் ஆகும்.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:13:33 +0530

மேலே சொன்ன கிரைய உடன்படிக்கை மற்றும் கிரைய பத்திரம் அனைத்தும் நான் ஓய்வு பெற்ற பிறகு ஏறப்டுத்தப்பட்டதா என்றால் இல்லை. நான் பணியில் இருக்கும் போது தான் ஏற்படுத்தப்பட்டது. சாட்சி மறுபடியும் பணிஓய்விற்கு பிற்பாடு ஏற்படுத்தப்பட்டதாக கூறுகிறார்.

2. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாக அரசாங்கத்தில் அனுமதி பெற்றேனா என்றால் அப்போது நான் அரசாங்கப்பணியில் இல்லை.

வா.த.சா.ஆ.4 முதல் 18 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:13:36 +0530

***Additional District Munsif , Cuddalore.***